**வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா நனோரெக்னோலொஜி (தனியார்) இன்ஸ்ரிரியூட் கம்பனி – 2015/2016**

-----------------------------------------------------------------------------------------------------

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா நனோரெக்னோலொஜி (தனியார்) இன்ஸ்ரிரியூட்டின் (கம்பனி) 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நான் உதவியைப் பெற்றிருந்தேன்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

### 1.2 கம்பனியின் ஸ்தாபிப்பு மற்றும் உரிமைத்துவம்

வரையறுக்கப்பட்ட இலங்கை நனோரெக்னோலொஜி (தனியார்) நிறுவனத்துடன் வரையறுக்கப்பட்ட நனோரெக்னோலொஜி (தனியார்) கம்பனியை ஒருங்கிணைப்பதன் மூலம் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட இலங்கை நனோரெக்னோலொஜி (தனியார்) நிறுவனம் ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக ஒருங்கிணைக்கப்பட்டது. இக் கம்பனி இலங்கை அரசாங்கத்திற்கும் மற்றும் ஆறு முன்னிலை தனியார் துறை கம்பனிகளுக்கிடையே பொது தனியார் பங்குடமையொன்றாக ஒருங்கிணைக்கப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின்

பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2016 மார்ச் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா நனோரெக்னோலொஜி (தனியார்) இன்ஸ்ரிரியூட்டின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### விடயத்தினை முக்கியத்துவப்படுத்துதல்

எனது அபிப்பிராயத்தை முனைப்பழிவு செய்யாமல் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு தொடர்பான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல 28 தொடர்பாக எனது கவனத்தை செலுத்துகின்றேன்.

### ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில் :

கணக்காய்விற்கு அவசியமான தகவல்களையும் விளக்கங்களினையும் நான் பெற்றுக்கொண்டுள்ளதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியினால் பேணப்பட்டுள்ளதுடன் மற்றும் கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

எவ்வாறாயினும், கம்பனியினுடைய தேறிய சொத்தானது கூறப்பட்ட மூலதனத்தில் அரைவாசியை விட குறைவாக காணப்படுகின்றமை மீது கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் 2007 ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் மூலதனத்தின் தீவிர நட்டத்தை எதிர்கொள்கின்றது. இந்நிலைமையினை குறைப்பதற்கு கம்பனி எடுத்த நடவடிக்கையினை நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இல 29 விபரிக்கின்றது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இனங்காமைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 6.3.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு முன்னைய ஆண்டிற்குரிய ஆண்டறிக்கைகள் கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9.2(உ) பிரிவு | நிறுவன வரைபடம் மற்றும் கம்பனியின் பதவியணியினர் போன்றவற்றிற்காக பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 9.3.1(i) பந்தி | கம்பனியின் ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வு (எஸ்ஓஆர்) என்பன அமைச்சினது சம்மதத்துடன் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்க்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளிலிருந்தான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 229,105,780 உடன் ஒப்பிடும் போது ரூபா 144,708,235 ஐ விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 84,397,545 ஆன முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வியாபார வருமதியாளர்களின் நட்டக்கழிவிற்கான தேவை குறைவாகக் காணப்பட்டமை நிதிசார் விளைவுகளில் மீதான முன்னேற்றத்திற்குக் காணரமாக அமைந்திருந்தது. எவ்வாறாயினும், கம்பனியானது திரண்ட நட்டத்தை கொண்டிருப்பதுடன் மீளாய்வாண்டின் போது திரண்ட நட்டமானது ரூபா 170,030,439 இனால் அதிகரித்திருந்தது.

### 3.2 கம்பனியினது பெறுமதி சேர்க்கை

மீளாய்வாண்டினதும் மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளினை பகுப்பாய்வு செய்யும் போது, 2011/2012 இலிருந்து 2015/2016 ஆம் ஆண்டு வரை தேறிய நட்டம் தொடர்ந்திருந்தது. எவ்வாறாயினும் ஊழியர்களின் ஊதியம், அரசாங்கத்திற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு என்பவற்றை கவனத்தில் எடுக்கும் போது 2014/2015 ஆம் ஆண்டைத் தவிர கம்பனியின் ஒட்டுமொத்தமான பங்களிப்பில் ஒரு தொடர்ச்சியான முன்னேற்றம் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும், தனிப்பட்ட தரப்பினரின் நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களிற்காக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் ஒதுக்கீடுகள் போன்றவற்றை இது உள்ளடக்கியிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்பு | | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | இருப்புக்கள் முகாமைத்துவம் | - | முறையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்களினை கம்பனி நிறுவாததுடன் மற்றும் இருப்புக்களினைப் பெறும் போது தரக்கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்கு போதுமான ஆவணங்கள் பராமரிக்கப்படாமை. |
| | | - | இருப்புக்கள் முகாமைத்துவ முறைமையானது இருப்புக்கள் வயதுப்பகுப்பாய்வு அறிக்கையினை வழங்குவதற்கு இயலுமையற்றதாக காணப்படுகின்றது. |
| (ஆ) | வருமதிகள் | - | முறைமையினால் வெளியிடப்பட்ட வயதுப் பகுப்பாய்வு 90 நாட்களுக்கு மேற்பட்ட கடன்பட்டோரினை பகுப்பாய்வு செய்யாமை. |
| (இ) | நிலையான சொத்து முகாமைத்துவம் | - | நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலுள்ள சொத்துக்களின் சம்பந்தப்பட்ட தகவல்களானது அவ் சொத்துக்களின் விபரமான விபரங்களினை இனங்காண்பதற்கு போதுமையற்றதாக காணப்படுகின்றமை |
| | | - | நிலையான சொத்துக்களின் விபரமான பௌதீக மெய்மையாய்வொன்று 2014 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |